[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2012 ஏப்ரல் 19

நெஞ்சார, மனதார வணங்கி, இந்த சாதாரண தொண்டனுடைய கனிவான வேண்டுகோளையும் ஏற்ற, தாயுள்ளம் கொண்ட உங்கள் பாதங்களைப் பணிந்து, நன்றி மலர்களை உங்கள் பாதங்களில் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 3 முதல் 7 வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளித்து அமர்கின்றேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி, இந்தியாவின் வழிகாட்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை ஏடுகள் குழுவின் தலைவராக நியமித்ததற்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு காலத்திலே "கல்விக் கண் திறந்தவர் காமராஜர்" என்று சொல்வார்கள். இன்றைக்கு யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு கல்வியிலே மிகப் பெரிய புரட்சியை உண்டுபண்ணுகிற அளவுக்கு, இந்த 2012 ஆம் ஆண்டு "கல்லூரிகளின் கண்களைத் திறந்தவர் புரட்சித் தலைவி அம்மா" என்கிற நிலையை உருவாக்கி, இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு சரித்திரம் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத் தமிழக மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.